# சர்வதேச மனிதாபிமானச் சட்டமும் இந்துசமயமும்

# International Humanitarian Law and Hinduism

N. Pushparajah
Senior Lecturer in Political Science, Department of Social Sciences Eastern University, Sri Lanka
Email: pushparajahn@esn.ac.lk

## Abstract

International humanitarian law, a branch of public international law, regulates the conduct of hostilities and seeks to protect those who are not or are no longer participating in hostilities, such as civilians and prisoners of war. Yet, the evolution of today's international humanitarian law has a long historical dimension. This history is deeply intertwined with the inevitability of war throughout human history and its inherent capacity for causing suffering and destruction. Throughout history, various legal frameworks, humanitarian principles, and philosophical and spiritual perspectives have contributed to the evolution of rules and customs aimed at reducing suffering during warfare. Hinduism, among the world's oldest and most influential religions, has offered unique insights into warfare and ethical conduct. This study aims to uncover the influence of Hindu traditions and sources on the development of international humanitarian law and explore how these influences have shaped the present state of international humanitarian law. The study adopts a qualitative approach, analyzing research literature through descriptive analysis to draw its conclusions. The findings reveal that Hindu religious sources, particularly the core concept of non-violence, provide clear guidelines, and principles related to the conduct of hostilities and rules of war. These principles resonate with various aspects of international humanitarian law, including regulations on methods and means of warfare, obligations for the dignified treatment and medical care of prisoners of war, and the protection of civilians. Significantly, these principles were later formalized in international law through the efforts of various individuals and organizations, including the Red Cross and the Hague Conventions. This contribution underscores the pivotal influence of Hindu sources in shaping contemporary international humanitarian law.

**Keywords:** Non-violence, Hinduism, International Humanitarian Law; Customs, Dharma

1. **அறிமுகம் .**

பொதுச் சர்வதேச சட்டத்தின் ஒரு கிளையாகக் காணப்படும் சர்வதேச மனிதாபிமானச் சட்டமானது போர்ச் சட்டம் எனவும் அழைக்கப்படுகின்றது. இது ஆயுத மோதல்களின் நடத்தையை ஒழுங்குபடுத்தும் ஒரு சட்ட அமைப்பு என்பதோடு பொதுமக்கள் மற்றும் போர்க் கைதிகள் போன்ற போர்களில் பங்கேற்காத மற்றும் இனி பங்கேற்க முடியாத நபர்களைப் பாதுகாக்க முயல்கின்றது. நவீன சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் மிக முக்கியமான மூலங்களாக அல்லது ஆதாரமாக 1949 ஆம் ஆண்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட நான்கு ஜெனீவாச் சமவாயங்கள், அவற்றின் 1977 ஆம் ஆண்டு மேலதிக பின்னேடுகள், வழக்காற்று சர்வதேச மனிதாபிமானச் சட்டம், மற்றும் சட்டத்தினுடைய பொது கோட்பாடுகள் ஆகியவை காணப்படுகின்றன (Statute of the International Court of Justice, Art.38). எனினும், இன்றைய நவீன சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் வளர்ச்சியானது பல நீண்ட வரலாற்றுப் பரிணாமங்களை உடையதாகக் காணப்படுகின்றது. ஏனெனில் போர் என்பது மனித வரலாற்றில் தவிர்க்கமுடியாத ஒன்றாக இருந்துவந்துள்ளதோடு அது மிகுந்த துன்பங்களையும் சேதங்களையும் ஏற்படுத்துவதாகவும் காணப்பட்டது. எனவே, இந்தப் போரின் நடத்தைகளை ஒழுங்குபடுத்துவதற்கான விதிகளும், மரபுகளும் பல்வேறு நாகரிகங்கள், மதமரபுகள் மற்றும் தத்துவங்களிலிருந்து உருவாக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டு மனித துயரங்களைக் குறைப்பதற்கு பங்களிப்புச் செய்துவந்துள்ளதைக் காணலாம்.

சமய மரபுகள் மற்றும் கலாசார விழுமியங்கள் உலகில் காணப்படுகின்ற பெரும்பாலான மக்களினுடைய வாழ்கையின் அனைத்து அம்சங்களிலும் செல்வாக்குச் செலுத்துபவையாகவும் மனிதர்களை நல்வழிப்படுத்துபவையாகவும் காணப்படுகின்றன (Bartles-Smith,2022). இவை ஒரு மனிதன் உலகத்தைப் பற்றி சிந்திக்கும், பார்க்கும் மற்றும் தொடர்புகொள்ளும் விதத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றது. உலகில் காணப்படுகின்ற மொத்த மக்கள் தொகையில் 85% மக்கள் ஏதோ ஒரு மதத்தை அடையாளப்படுத்துகின்றவர்களாகக் காணப்படுகின்றனர் (World Population Review, 2023). எனவே, மனித துன்பத்தைக் குறைப்பதற்கும்,மனிதர்களை நல்வழிப்படுத்துவதற்கும் வரலாற்றுக்காலம் முழுவதும் நடைபெற்ற யுத்தங்களை ஒழுங்குபடுத்துவதில் சமயங்கள் மிகுந்த செல்வாக்கைப் பெற்றிருப்பதைக் காணலாம். எனினும், உலகளாவிய சர்வதேச போருக்கான நடத்தை விதிமுறைகள் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை உருவாக்கப்படவில்லை என்பதை கருத்தில்

கொள்ள வேண்டியது அவசியமானதாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து முதலாம் உலகப் போர், இரண்டாம் உலகப் போர் மற்றும் பல உள்நாட்டுப் போர்கள் போன்ற நவீன யுத்தங்களினால் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களின் அடிப்படையில் அரசுகள் தொடர்ச்சியாக சில நடைமுறை விதிகளை உருவாக்குவதற்கு ஒப்புக்கொண்டு நவீன சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தை ஏற்படுத்தியுள்ளன (ICRC, 2004). எனினும், இந்த நிலையை அடைவதற்கு சர்வதேச மனிதாபிமானச் சட்டமானது பல்வேறு தலைமுறைகளைத் தாண்டவேண்டிய தேவை காணப்பட்டது. ஒவ்வொரு தலைமுறையும் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்களவு பங்களிப்புச் செய்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் வரலாற்றை ஆராயும் ஆய்வாளர்கள் யுத்தம் தொடர்பான ஒழுங்குவிதிகளின் மூலங்கள் மேற்கத்தைய சூழ்நிலைகளை அடிப்படையாகக் கொண்டு மாத்திரம் எழுந்தவை அல்ல என்பதை தெளிவுபடுத்துகின்றனர். சீன, ஜப்பானிய, இந்திய மற்றும் அரபு கலாசாரங்கள் அந்தந்த மரபுகளின் போர் விதிகளை ஏற்படுத்தி இன்றைய சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தினுடைய வளர்ச்சியில் பங்களிப்புச் செய்துள்ளன. எனவேதான், சர்வதேச மனிதாபிமானச் சட்டமானது அனைத்து மனித நாகரிகங்களின் செல்வாக்கிற்கு உட்பட்டது என்பது சந்தேகத்துக்கு இடமின்றி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து நாகரிகங்களும் அவற்றை ஏற்றுக்கொள்வதில் ஒன்றிணைந்துள்ளன(Alexander, 2015). 1859 ஆம் ஆண்டின் சோல்∴பெரினோ (Solferino) போர் மற்றும் ஹென்றி டுனான்ட்டின் (Henry Dunant) செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவை உலகில் காணப்படுகின்ற அனைத்து சமய மரபுகளிலும் காணப்படுகின்ற இரக்க உணர்வைத் தூண்டுவதாகக் காணப்படுகின்றது. அதாவது மரபுகளை மீண்டும் உயிர்ப்பித்தல், தீவிரப்படுத்துதல், கட்டியெழுப்புதல் மற்றும் நிலைநிறுத்துதல் ஆகியவற்றைப் பிரதிபலிப்பதாக உள்ளது (Mani, 2001).

இந்தவகையில் யுத்த நியதிகளையும், விதிகளையும் உலகுக்கு வழங்கிய சமயங்களுள் குறிப்படத்தக்களவு செல்வாக்குச் செலுத்துகின்ற சமயமாக இந்துசமயம் காணப்படுகின்றது. இந்து சமயமானது உலகில் காணப்படுகின்ற சமயங்களுள் மிகவும் பழமையான மற்றும் பெரிய சமயங்களுள் ஒன்றாகக் காணப்படுகின்றது. ஏறத்தாழ 1.16 பில்லியன் பேர் இந்து சமயத்தினைப் பின்தொடர்பவர்களாகக் காணப்படுகின்றனர் (World Population Review,2023). இந்து சமயம் என்பது பெருமைப்படக்கூடிய வளமான வரலாறு, பலவிதமான நம்பிக்கைகள், நடைமுறைகள் மற்றும் மரபுகளை உள்ளடக்கிய ஒரு புனிதமான சமயமாகும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் வளர்ச்சியில் இந்து சமயமானது ஆழமான தாக்கத்தினை

ஏற்படுத்தியுள்ளதைக் காணலாம். குறிப்பாக மகாபாரதம் மற்றும் மனுதர்ம சாத்திரம் போன்ற புராதன இந்துசமய நூல்களின் பங்களிப்பானது சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க செல்வாக்கைச் செலுத்தியுள்ளதைக் காணலாம்.

மறுபுறம், சமயங்களுக்கும் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்துக்கும் இடையிலான உறவுகள் தொடர்பாக பல்வேறுபட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன(Bartles-Smith,2022; Bartles-Smith et al.,2021; Greenwood,1995; Zoli, n.d.; Cismas & Heffes,2020; Kruk,2021; Kilby,2022).இதில் இந்து சமயத்தினுடைய செல்வாக்குத் தொடர்பாகவும் சில ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதைக் காணலாம் (Balkaran & Dorn,2022; Mani,2001; Singh,2021). எனினும், நவீன சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தினுடைய வளர்ச்சியில் இந்து சமயத்தினுடைய செல்வாக்குத் தொடர்பான ஆய்வுகள் குறைவாகவே உள்ளன, குறிப்பாக அத்தகைய ஆய்வுகள் தமிழ் மொழியில் மிகவும் அரிதாகவே உள்ளன. எனவே, இந்த ஆய்வுக் கட்டுரையானது இந்த ஆய்வு இடைவெளியை நிரப்புவதாகக் காணப்படுகின்றது.

## 2. ஆய்வின் நோக்கம்

ஆய்வானது சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தினுடைய வளர்ச்சியில் இந்துசமயத்தினுடைய மரபுகள், மற்றும் ஆதாரங்கள் எத்தகைய தாக்கத்தைக் கொண்டிருந்தது எனவும் அத்தகைய தாக்கங்கள் நவீன சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தினுடைய இன்றைய நிலையை வடிவமைப்பதில் எத்தகைய பங்களிப்பை வழங்கியுள்ளது என்பதையும் வெளிக்கொணர்வதாகக் காணப்படுகின்றது. இது சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் தோற்றம், பரிணாம வளர்ச்சி மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டத்தினை இந்துசமயமானது வடிவமைப்பதில் ஆற்றிய பங்கு தொடர்பில் ஆழமான புரிதலைப் பெறுவதற்கு அடிப்படையாக அமையும்.

## 3. ஆய்வு முறையியல்

இது ஒரு பண்புசார் ஆய்வாகும். இந்த ஆய்வுக்கு ஆய்வோடு தொடர்பான ஆய்வு நூல்கள், ஆவணங்கள், சஞ்சிகைகள் மற்றும் அறிக்கைகள் போன்றவைகளை நூலகங்கள், நம்பிக்கைக்குரிய இணையத்தளங்கள் போன்றவைகளிலிருந்து பெற்று தேவையான தரவுகள் சேகரிக்கப்பட்டன. இவ்வாறு சேகரிக்கப்பட்ட தரவுகள் விபரணப் பகுப்பாய்வின் மூலம் பகுப்பாய்வுக்கு உற்படுத்தப்பட்டு ஆய்வினுடைய நோக்கங்களை அடைவதற்காக ஒழுங்குபடுத்தப்பட்டு பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

## 4. ஆய்வுக்கான கோட்பாட்டு அடிப்படை

### 4.1. சர்வதேச மனிதாபிமானச் சட்டம்

சர்வதேச மனிதாபிமானச் சட்டம் என்பது ஆயுத மோதல்கள் மற்றும் ஆக்கிரமிப்பு சூழ்நிலைகளுக்கு பயன்படுத்தப்படும் ஒரு சட்டக்கட்டமைப்பாகும். இது யுத்தத்தில் பங்கெடுக்காத அல்லது இனிமேல் பங்கெடுக்க முடியாத நபர்களைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளதோடு யுத்தத்தின் வழிமுறைகள் மற்றும் முறைகளை ஒழுங்குபடுத்திக் கட்டுப்படுத்துவதாகவும் காணப்படுகின்றது. எனவே, சர்வதேச மனிதாபிமானச் சட்டமானது யுத்தகாலத்தின் போது எவை தாக்கப்படலாம், எவை தாக்கப்படக் கூடாது என்பது தொடர்பாகவும், யார் தாக்கப்படலாம், யார் தாக்கப்படக் கூடாது என்பது தொடர்பான விதிமுறைகள் மற்றும் கோட்பாடுகளைத் தெளிவுபடுத்துகின்ற ஒரு சட்டமாகக் காணப்படுகின்றது (புஸ்பராசா, 2021; ICRC,2004).

மேலும், சர்வதேச மனிதாபிமானச் சட்டம் ஆயுத மோதலில் (சர்வதேச ஆயுத மோதலோ அல்லது சர்வதேசம் சாராத ஆயுதமோதலோ) இருந்து நேரடியாக எழும் மனிதாபிமான பிரச்சினைகளை தீர்ப்பதற்கான விதிமுறைகளை உள்ளடக்கியுள்ளது. எனவே, சர்வதேச மனிதாபிமானச் சட்டம் ஆயுத மோதல்களின்போது எழும் மனித துன்பங்களை மட்டுப்படுத்தவும், அட்டூழியங்களைத் தடுப்பதையும் நோக்கமாகக் கொண்ட கோட்பாடுகள், கொள்கைகள் மற்றும் விதிமுறைகளை உள்ளடக்கியுள்ள சட்டத் தொகுப்பாகும். எனினும், பாரம்பரியமாக சர்வதேச மனிதாபிமானச் சட்டமானது அரசுகளுக்கிடையிலான உறவுகளை மட்டுமே ஒழுங்குபடுத்திய சட்ட ஏற்பாடாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், அதன் பிற்கால வளர்ச்சி அரசு சாரா ஆயுதக் குழுக்கள் போன்ற பரந்த அளவிலான ஏனைய செயற்பாட்டாளர்களையும் உள்ளடக்கும் வகையில் பரிணாமமடைந்த்துள்ளதைக் காணலாம். எனவே, சர்வதேச மனிதாபிமானச் சட்டமானது ஆயுத மோதலோடு சம்பந்தப்பட்ட தரப்புகளான அரசுகள் மற்றும் அரச சார்பற்ற ஆயுதக் குழுக்கள் போன்றவற்றின் உரிமைகளையும் பொறுப்புக்களையும் அங்கீகரிக்கின்றவையாகக் காணப்படுகின்றது (புஸ்பராசா,2021; ICRC,2004). .

### 4.2. சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகள்

சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் மனிதர்களின் துன்பங்களைக் குறைக்கும் நோக்கத்தில் மோதலைக் ஒழுங்குபடுத்துவதற்காக பரந்த

அளவில் முயற்சிப்பதாகக் காணப்படுகின்றன. இந்தக் கோட்பாடுகள் யுத்தத்தை ஒழுங்குபடுத்துவதோடு மோதல்களின்போது பொதுமக்களையும் அவர்களது இலக்குகளையும் பாதுகாக்க முயல்கின்றன. பொதுவாக மனிதநேய கோட்பாடு (Principle of humanity), இராணுவத் தேவைக் கோட்பாடு (Principle of military necessity), வேறுபாடு காணுதல் கோட்பாடு (Principle of Distinction), சரிசமவீத அளவுக் கோட்பாடு (Principle of proportionality) மற்றும் முன்னெச்சரிக்கை கோட்பாடு (Principle of precaution) போன்றவற்றின் அடிப்படையிலும் நவீன சர்வதேச மனிதாபிமானச் சட்டம் கட்டியெழுப்பப்பட்டுள்ளதைக் காணலாம்.

*மனிதநேய கோட்பாடு (Principle of humanity) மற்றும் இராணுவத் தேவைக் கோட்பாடு (Principle of military necessity):* பொதுவாக சர்வதேச மனிதாபிமானச் சட்டமானது இவ்விரு அடிப்படைக் கோட்பாடுகளுக்கிடையே ஒரு சமநிலையை ஏற்படுத்துவதாகக் காணப்படுகின்றது. எனவே, யுத்த நிலையில் எழும் இராணுவத் தேவைக்கும் மனிதாபிமான பாதுகாப்பிற்கான தேவைகளுக்கும் இடையிலான நிலையான சமநிலையை சர்வதேச மனிதாபிமானச் சட்டம் பிரதிபலிக்கின்றது எனலாம். யுத்தத்தில் சம்மந்தப்பட்ட தரப்புக்களால் பயன்படுத்தக்கூடிய பலப்பிரயோகம் எதிரிகளையும், உயிர்களையும், வளங்களையும் மிகச்சிறிய இழப்புடன் விரைவாக வெல்லத் தேவையானவற்றுடன் மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு மோதலின் நியாயமான நோக்கத்தை அடையத் தேவையில்லாத எந்தவொரு துன்பத்தையும் அழிவையும் ஏற்படுத்துவதற்கு மனிதநேயக் கோட்பாடு தடைவிதிக்கின்றது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இராணுவத் தேவைக் கோட்பாடானது மேலதிக பின்னேடு I இன் உறுப்புரை 57 (3) மற்றும் செயின்ட் பீட்டர்ஸ்வேர்க் பிரகடனத்திலும் (Saint Petersburg Declaration of 1868) உள்ளடக்கப்பட்டுள்ளதைக் காணலாம். மனிதநேயக் கோட்பாடு ஜெனீவா சமவாயங்களுக்கான பொது உறுப்புரை 3 (Common Article 3 to the Geneva Conventions) இல் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இது ஜெனீவா சமவாயங்கள் I-IV போன்றவற்றின் முறையே உறுப்புரைகளான 12,12,13,27 போன்றவற்றிலும், மேலதிக பின்னேடு II இன் உறுப்புரை 4 லும் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும் (புஸ்பராசா, 2021; Paliwala,2020)

*வேறுபாடுகாணுதல் கோட்பாடு (Principle of Distinction):* இக் கோட்பாடானது பொதுமக்கள் மற்றும் போர்வீரர்களுக்கிடையிலான வேறுபாட்டினை எடுத்துரைக்கின்றது. சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் பல விதிகளை அடிப்படையாகக் கொண்ட இந்த வேறுபாடு காணுதல் கோட்பாடானது யுத்தகாலத்தில் போர்வீரர்கள் மட்டுமே நேரடியாக குறிவைக்கப்படலாம் எனக்கூறுகின்றது. ஆயுத மோதலில் பொதுமக்களைப் பாதுகாக்க சர்வதேச மனிதாபிமானச் சட்டம் வழங்கும் அவசியமான சமரசம் இதுவாகும் எனக் கூறப்படுகின்றது. வேறுபாடுகாணுதல் கோட்பாடு இல்லாமல், போர் முறைகள் சில வரைமுறைகளுக்கு உட்பட்டிருக்காது என்பது சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும். ஜெனீவா சமவாயங்களுக்கான மேலதிக பின்னேடு 1 இன் உறுப்புரைகளான 48 மற்றும் 52 களில் இக்கோட்பாடு தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளன (புஸ்பராசா, 2021 Paliwala, 2020).

*சரிசமவீத அளவுக் கோட்பாடு (Principle of Proportionality):* சரிசமவீத அளவுக் கோட்பாடானது தாக்குதல்களின்போது பொதுமக்களுக்கு குறைந்த அளவிலான தீங்கு விளைவிப்பதை வலியுறுத்துவதன் மூலம் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய தீங்குகளைக் கட்டுப்படுத்துவதோடு பாதுகாப்பும் வழங்குகின்ற ஒரு கோட்பாடாகக் காணப்படுகின்றது. மேலும், பொதுமக்களுக்கு தீங்கு ஏற்படும்போது அது இராணுவ நன்மைக்கு சரிசமவீதமாக இருக்க வேண்டும் எனக் கூறுகின்றது. அதாவது, உறுதியாகவும், நேரடியாகவும் எதிர்பார்க்கப்பட்ட இராணுவ அனுகூலந்தொடர்பில் மிதமிஞ்சியதாக இருக்கும் என்று எதிர்பார்கக்கூடியதான தாக்குதலொன்றைத்தொடுப்பது தடை செய்யப்பட்டுள்ளது. இக்கோட்பாடு மேலதிக பின்னேடு I இன் உறுப்புரை 51 (5) (b) இல் நன்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இது எதிர்பார்க்கப்பட்ட இராணுவ நன்மைகளை விட பொதுமக்களுக்கு தீங்கு அதிகமாக இருக்கும் எனக் கணிக்கும் தாக்குதல்களைத் தடைசெய்கின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்(புஸ்பராசா, 2021; Paliwala,2020).

*முன்னெச்சரிக்கை கோட்பாடு (Principle of Precaution):* இராணுவ நடவடிக்கைகளின் போது பொதுமக்கள் மற்றும் பொதுமக்கள் இலக்குகளைக் காப்பாற்றுவதற்காக மோதலுடன் தொடர்புடைய தரப்புக்கள் தொடர்ச்சியாக கவனம் செலுத்த வேண்டும் எனக் கூறப்படுகின்றது. யுத்தத்தில் ஈடுபடும் தரப்பினர் இலக்கு உண்மையில் ஒரு இராணுவ இலக்கு என்பதை ஒருமுறைக்கு இருமுறை சரிபார்ப்பது உட்பட தாக்குதலுக்கு முன்னர் பொதுமக்களை திறம்பட எச்சரிப்பதும் இதில் அடங்கும்.

இவை மோதல்களின்போது பொதுமக்களுக்கு தீங்கு விளைவிப்பதைத் தவிர்ப்பதற்கு அல்லது இழப்புக்களை குறைந்தபட்சமாகக் குறைப்பதற்கான முயற்சியாகவும் காணப்படுகின்றது. முன்னெச்சரிக்கைக் கோட்பாடானது ஆயுதங்களைத் தேர்ந்தெடுப்பவற்றில் தாக்கங்களைச் செலுத்துகின்றது. தாக்குதல்களில் முன்னெச்சரிக்கை விதிகளை வேண்டுமென்றே உதாசீனம் செய்வது யுத்தக் குற்றமாக அமையலாம். 1977 ஆம் ஆண்டு மேலதிக பின்னேடு I உறுப்புரை 57 இல் குறிப்பிடுவதைப்போல் தாக்குதலைத் திட்டமிடுபவர்கள் அல்லது தீர்மானிப்பவர்கள் ‘‘தாக்குதல் வழிமுறைகள் மற்றும் முறைகளைத் தேர்ந்தெடுப்பதில் சாத்தியமான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்’’. இக்கோட்பாடு சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் ஏனைய கோட்பாடுகளுடன் நெருக்கமான தொடர்புடையதாகக் காணப்படுகின்றது என்பதையும் நோக்கவேண்டியது அவசியமானதாகும்(புஸ்பராசா, 2021; Paliwala, 2020). இந்தக் கோட்பாடுகளின் வளர்ச்சியில் பல்வேறு மூலங்கள் பங்களிப்புச் செய்தாலும் இந்துசமய இலக்கியங்கள் மற்றும் மரபுகளும் குறிப்பிடத்தக்களவு பங்களிப்புச் செய்துள்ளதைக் காணலாம்.

### 4.3. இந்து சமயத்தின் மூலமும் அகிம்சை தொடர்பான கொள்கையும்

#### 4.3.1. இந்து சமயத்தின் மூலங்கள்

இந்தியாவில் தோன்றிய இந்துசமயமானது அடிப்படையில் ஒரு வாழ்க்கை முறையும் தர்மமும் ஆகும். தர்மம் என்ற சொல் சமஸ்கிரத வார்த்தையான ”திரி” (dhri) என்பதிலிருந்து உருவானதாகும். அதாவது ”ஒன்றாகப் பிடிப்பது” என்பது இதன் அர்த்தமாகும். இந்து தர்மத்தைப் பின்பற்றுபவர்கள், ஆன்மீக, சமூக, சட்ட மற்றும் தார்மீக விதிகள், செயல்கள், அறிவு மற்றும் கடமைகளால் வழிநடத்தப்படுகிறார்கள். அவை மனித இனத்தை ஒன்றிணைக்கும் பொறுப்புவாய்ந்ததாகக் காணப்படுகின்றது. தர்மம் என்பது மதம் அல்ல, இது அனைத்து செயல்களையும் கட்டுப்படுத்தும் சட்டம் ஆகும். இந்து தர்மம் சனாதன தர்மம் [(Sanatan Dharma) (என்றும் வாழும் அறம்)] மற்றும் வேத தர்மம் [(Vedic Dharma) (வேதங்களின் அடிப்படையிலான தர்மம்)] போன்ற பிற பெயர்களினாலும் அறியப்படுகின்றது. இந்துசமயம் அரசர்கள் மற்றும் போர்வீரர்களின் உரிமைகள் மற்றும் கடமைகளை உள்ளடக்கிய விதிகளை உள்ளடக்கியது மட்டுமல்லாமல், அரசுகளுக்கு இடையேயான உறவுகளை நிர்வகிக்கும் தேச தர்மத்தின் விதிமுறைகளையும் உலகுக்கு வழங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும் (Sinha, 2005).

இந்துசமயத்தின் இத்தகைய சிறப்புக்கள் உட்பட பல்வேறு அடிப்படைக் கொள்கைகள் மற்றும் தத்துவங்கள் இந்துசமயத்தின் ஆதாரமாகக் காணப்படுகின்ற பல்வேறு நூல்களில் பொதிந்துள்ளதைக் காணலாம். இந்துக்கள் தங்கள் சமயத்தில் புதிய கூறுகள் மற்றும் கருத்துக்களை அறிமுகப்படுத்தும் அதிகாரம் கொண்டவர்களாக கருதப்படுவதால், எண்ணற்ற விளக்கங்கள், மரபுகள் மற்றும் போதனைகள் இந்துசமயத்தில் உள்ளன. எனினும், இந்துசமயத்தின் முதன்மையான ஆதாரங்களாக ஸ்ருதி (Sruti) மற்றும் ஸ்மிருதி (Smriti) காணப்படுகின்றன. ஸ்ருதிகள் நான்கு வேதங்களான ரிக் வேதம், சாம வேதம், யஜுர் வேதம் மற்றும் அதர்வ வேதம் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. ஒவ்வொரு வேதமும் சம்ஹிதை (மந்திரம்), பிராமண (சடங்குகள்), ஆரண்யகங்கள்(விளக்கங்கள்) மற்றும் வேதாந்தம் (உபநிஷதங்கள்) போன்ற நான்கு பகுதிகளைக் கொண்டுள்ளது (Sinha,2005). மறுபுறம் பதினெட்டு முக்கிய ஸ்மிருதிகள் அல்லது தர்ம சாஸ்திரங்கள் உள்ளன. இந்து நீதியியல் ஸ்மிருதிகளை சட்டத்தின் அடிப்படையாகக் கருதுகின்றன. இவை அனைத்தும் தர்மத்தின் அடிப்படையில் சமுதாயத்திற்கான விதிகளை வகுத்துள்ளன (Sinha, 2005). மேலும், இந்துசமயத்தின் மிகவும் செல்வாக்குமிக்க காவியங்களான இராமாயணம் மற்றும் மஹாபாரதம் ஆகியவை விளங்குகின்றன.

இந்த ஆதாரங்கள் இந்துசமயத்தின் பல்வேறு கோட்பாட்டு அடிப்படைகளை வழங்குகின்றன. அவற்றில் சில கோட்பாடுகள் சர்வதேச சட்டத்தின் வளர்ச்சியில் அடிப்படையாக அமைந்துள்ளமையைக் காணலாம்.

### 4.3.2.அஹிம்சை

இந்து சமயத்தின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றாக அஹிம்சை (ahimsa) தொடர்பான கருத்துக் காணப்படுகின்றது. இது வன்முறையற்றது என அர்த்தப்படுத்தப்படுகின்றது. அஹிம்சை என்பது பண்டைய இந்து நூலான யோக சூத்திரத்தில் (Yoga Sutras) கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள ஐந்து "யாமங்கள்" (five "yamas")அல்லது நெறிமுறை (ethical) வழிகாட்டுதல்களில் ஒன்றாகும (Bryant et al.,2009). இந்த கொள்கையானது அனைத்து உயிரினங்களும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளன என்ற நம்பிக்கையில் வேரூன்றியுள்ளது. எனவே, ஒரு

உயிரினத்திற்கு தீங்கு விளைவிப்பது அனைத்து உயிரினங்களுக்கும் தீங்கு விளைவிக்கும் என்ற நம்பிக்கையை உடையதாக இது காணப்படுகின்றது (Coward et al.,1989; Ponnu, n.d.). அஹிம்சையானது இந்திய சமூதாயத்தில் பல நூற்றாண்டுகளாக சட்ட முறைமையில் பிரதிபலித்தது. அதுமாத்திரமல்ல சமகாலத்தில் உலகளாவிய வகையில் முக்கியமான ஒருவராக மதிக்கப்படும் மகாத்மா காந்தி, அகிம்சையின் நவீன கால நடைமுறையின் சின்னமாகக் கருதப்படுகின்றார். அஹிம்சை என்பது ஒரு கொள்கை மட்டுமல்ல, அது ஒரு வாழ்க்கை முறையாகும் என அவர் நம்பினார் என்பதோடு அதை அவர் இந்திய சுதந்திர இயக்கத்தில் ஒரு கருவியாகவும் பயன்படுத்தினார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும் (Ponnu,n.d.; Sinha,2005). தாக்குதல்கள் அல்லது வன்முறையை நாடாமல் சமூக மற்றும் அரசியல் மாற்றத்தை அடைய அஹிம்சையைப் பயன்படுத்தலாம் என்று அவர் நம்பினார் என்பதோடு அதை அவர் நடைமுறைப்படுத்தியும் காட்டினார்.

அஹிம்சையின் ஆன்மீக முக்கியத்துவத்திற்கு அதிகமாக, அஹிம்சை தொடர்பான கருத்தானது அன்றாட வாழ்வில் நடைமுறைப் பயன்பாடுகளையும் கொண்டுள்ளது. எல்லா உயிர்களிடத்தும் இரக்கத்துடனும் கருணையுடனும் செயல்படவும், முடிந்தவரை மோதல்கள் மற்றும் ஆக்கிரமிப்பு எண்ணங்களைத் தவிர்க்கவும் இது தனிநபர்களை ஊக்குவிக்கின்றது. விலங்குகளுக்கு தீங்கு விளைவிப்பதைத் தவிர்ப்பதற்காக பல இந்துக்களால் பின்பற்றப்படும் சைவ உணவு முறையுடன் அஹிம்சையும் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டுள்ளது (Knott, 2016). எனவேதான், இந்து சமயத்தில், அஹிம்சை என்பது உடல்ரீதியான வன்முறை மட்டுமல்ல, பேச்சு மற்றும் எண்ணங்களின் மூலம் தீங்குகளைத் தவிர்ப்பதும் ஆகும். சுருக்கமாகக் கூறுவதானால், அஹிம்சை என்ற கருத்தானது இந்து சமயத்தின் அடிப்படைக் கொள்கையாகும். இது அனைத்து உயிரினங்களுக்கும் நல்லிணக்கம், இரக்கம் மற்றும் மரியாதை ஆகியவற்றை ஊக்குவிக்கின்ற ஒரு கொள்கையாகக் காணப்படுகின்றது எனலாம் (Knott, 2016). அஹிம்சையானது கர்மா(karma) மற்றும் தர்மம்; (dharma) அல்லது நீதி(righteousness) தொடர்பான கருத்துடன் நெருக்கமாக தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. கர்மாவானது ஒருவரின் செயல்களின் விளைவுகள் இறுதியில் அந்த தனிநபரால் உணரப்படும் என்று கூறுகின்றது (Coward et al.,1989). அதேநேரம் தர்மம் என்பதும் கடமை அல்லது நீதி என அர்த்தப்படுத்தப்படலாம் (Coward et al.,1989). இந்த கோட்பாடு மோதல்கள் உட்பட

வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் தார்மீக மற்றும் அறநெறி விழுமியங்களை நிலைநிறுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது. ஒருவரின் கடமைகள் மற்றும் பொறுப்புகளை நியாயமான மற்றும் நெறிமுறைகளுக்குட்பட்ட முறையில் நிறைவேற்றுவதன் முக்கியத்துவத்தை இது வலியுறுத்துகின்றது. மேலும், இந்தக் கொள்கைகள் சூழ்நிலைகளைப் பொருட்படுத்தாமல், சரியான மற்றும் நியாயமானதைச் செய்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதைக் காணலாம்.

இந்த அஹிம்சை தொடர்பான கருத்து உட்பட இந்துசமய ஆதாரங்கள் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தில் பல்வேறுபட்ட விதிகள் மற்றும் கோட்பாடுகள் போர் முறைகள், வழிமுறைகள் அல்லது போர் ஆயுதங்களும் அவற்றின் மட்டுப்பாடும், யுத்தக் கைதிகளை மரியாதையுடனும் கௌரவத்துடனும் நடத்தவேண்டிய கட்டுப்பாடு, காயமடைந்த யுத்தக்கைதிகளுக்கான மருத்துவ சிகிச்சை மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பு உள்ளிட்ட போர் நடத்தை மற்றும் போர் விதிகள் தொடர்பான தெளிவான வழிகாட்டுதல்கள், கொள்கைகள் மற்றும் கோட்பாடுகளை உள்ளடக்கியுள்ளதாகக் காணப்படுகின்றன. செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் ஹேக் சமவாயங்கள் உட்பட பல்வேறு தனிநபர்கள் மற்றும் அமைப்புகளின் முயற்சியால் இந்தக் கோட்பாடுகள் பின்னர் முறையான வகையில் சர்வதேச சட்டமாக உருவாக்கப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## 5. பெறுபேறும் கலந்துரையாடலும்

### 5.1. இந்துசமயத்தில் யுத்தம்

சர்வதேச உறவுகளில் நாடுகளுக்கிடையிலான சர்ச்சைகளைத் தீர்ப்பதற்கு அமைதியான மற்றும் பலவந்தமான/கட்டாய வழிமுறைகள் எனப் பல உபாயங்கள் அரசுகளால் பின்பற்றப்படுகின்றன. நாடுகளுக்கிடையிலான பிணக்குகள் பேச்சுவார்த்தைகள், மத்தியஸ்தம், சமரசம், விசாரணை, நடுவர் மன்றம், நீதித்துறை தீர்வு போன்ற அமைதியான வழிமுறைகளின் மூலமும், பதிலடி கொடுத்தல், பழிவாங்குதல், தடைவிதித்தல், முற்றுகை, மற்றும் தலையீடு போன்ற பலவந்தமான வழிமுறைகள் மூலமும் தீர்த்துக்கொள்ளப்படுகின்றன. அரசுகள் தக்களது பிரச்சினைகளை வலுக்கட்டாயமாக தீர்த்துக்கொள்ள முடியாதபோது இறுதி முயற்சியாக போரை நாடலாம். தேசங்களுக்கிடையிலான உறவுகள் தொடர்பின் இந்த நவீன கருத்தாக்கமானது அடிப்படையாக அமைகின்றது.

போர் தொடர்பான இந்தகைய நவீன கருத்தாக்கம் பண்டைய இந்து மரபில் நடைமுறையில் இருந்துள்ளன என்பதை பல்வேறுபட்ட ஆதாரங்களின் மூலம் அறியக்கூடியதாக இருக்கின்றது. பண்டைய இந்தியாவின் மக்கள் தங்களுடைய வாழ்க்கையை அரசியல் அலகுகளின் அடிப்படையில் ஒழுங்கமைக்கத் தொடங்கியதிலிருந்து, சமூகங்களுக்கிடையேயான உறவுகளை ஒழுங்குபடுத்த சில விதிகளின் தேவையை அவர்கள் உணர்ந்தனர் என்பதை பல ஆதாரங்களின் மூலம் அறியக்கூடியதாக உள்ளது. வேதங்கள், சாத்திரங்கள் மற்றும் இராமாயணம் மற்றும் மகாபாரதம் போன்ற இதிகாசங்கள் போர்ச் சட்டங்கள் மற்றும் பழக்கவழக்கங்களின் இருப்பை உறுதிப்படுத்தியுள்ளன. இந்து ஆதாரங்கள் போர் மற்றும் பலப்பிரயோகம் பற்றிக் குறிப்பிட்டாலும் அவை அமைதியான வகையில் மோதலைத் தீர்த்துக்கொள்ளும் வழிகளை வலியுறுத்துகின்றன என்பதோடு பலத்தைப் பயன்படுத்துவது இறுதி முயற்சியாகவே இருக்கவேண்டும் எனவும் வலியுறுத்துகின்றன. பலப்பிரயோகமானது தற்பாதுகாப்பு அல்லது அப்பாவிப் பொதுமக்களை பாதுகாக்கும் சூழ்நிலைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. மனுதர்மசாத்திரத்தின் பிரகாரம் ஒரு அரசன் முதலில் தன் எதிரிகளுடன் சமரசம் செய்வதன் மூலமும், பரிசுகளை வழங்குவதன் மூலமும் போரினைத் தவிர்க்க முயல வேண்டும். இத்தகைய முயற்ச்சிகள் அனைத்தும் தோல்வியில் முடியும்போது இறுதி முயற்சியாகக்தான் யுத்தம் செய்ய வேண்டும் எனக் கூறுகின்றது (Singh,2021; Singh,2017).

இந்து சமயமானது போர் விரும்பத்தகாதது என்பதோடு தவிர்க்கப்பட வேண்டியதும் ஆகும் என நம்புகின்றது, ஏனெனில் அது சக மனிதர்களைக் கொல்வதை உள்ளடக்கியுள்ளது. கௌடில்யர் குறிப்பிடத்தக்க வகையில் அரசுகளின் கூட்டணிகள் தொடர்பான விடத்தில் கணிசமான பங்கை வகிக்கும் இறையாண்மையாளர்களிடையே பேச்சுவார்த்தைகளின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறார். மேலும், போர் மற்றும் அமைதி தொடர்பான விடயங்களில் மன்னர்கள், போரில் ஈடுபடுவதற்கு முன், மோதல்களைத் தீர்ப்பதற்கான முக்கிய வழிமுறையாக பேச்சுவார்த்தையை நாடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். கௌடில்யரின் அர்த்தசாஸ்திரம் போரை ஒரு தாக்குதல் (ஆட்சேபனைக்குரிய) நடவடிக்கையாக வரையறுக்கின்றது. அக்னி புராணம் மற்றும் ஆரம்பகால ஆதாரங்கள் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ யுத்தம் தொடர்பில் ஒத்த நிலைபாட்டைக் கொண்டுள்ளன. எனவே ஆரம்பகால ஆதாரங்கள் சட்டத்திற்குப் புறம்பான போர் முறைகளைத் தடைசெய்வது குறித்த பொதுவான கோட்பாட்டு ஒப்பந்தத்தைப் பதிவு

செய்துள்ளனர். அவை நீதியான காரணத்திற்காக ஒரு போர் நேர்மையாக நடத்தப்பட வேண்டும் என்பதாகும். போர்வீரன் என்பவன் ஒரு சாத்தியமான வெகுமதியைப் பற்றி சிந்திக்காமல் தன் கடமையை செய்ய தார்மீக ரீதியில் கடமைப்பட்டிருக்கிறான். எல்லா சமயங்களிலும், எல்லாச் சூழ்நிலைகளிலும் போர் செய்பவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளப்பட்ட போர் விதிகளை கடைபிடிக்க வேண்டும் என்பது தர்மசாஸ்திரத்தின் புனித சட்டங்களால் வெளிப்படையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது(Sinha, 2005; Mani, 2001).

இந்துசமய ஆதாரங்கள் இரண்டு வகையான போர்களைப் பற்றிக் கூறுகின்றன. அவை தர்ம யுத்தம் [(நீதியான போர்) (Dharma Yuddha)] மற்றும் அதர்ம யுத்தம் [(அநீதியான போர்) (Adharma Yuddha)] ஆகியவை ஆகும். அதர்ம யுத்தம் குட்ட யுத்தம் (Kutta Yuddha) என்றும் அழைக்கப்பட்டது. ஒரு நியாயமான காரணத்திற்காக ஒரு நீதியான போர் நடந்ததை இந்து ஆதாரங்கள் வெளிப்படுத்துகின்றன. எனினும் தர்மம் அல்லது நீதி தொடர்பான கருத்து இந்து தத்துவத்தின் மையமாகக் காணப்படுவதனால் இது போர்ச் சூழலில் கூட நெறிமுறைக் கொள்கைகளை நிலைநிறுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது (Sinha,2005; Mani, 2001).

தர்ம மற்றும் அதர்ம யுத்தங்களுக்கு உதாரணமாக மகாபாரதத்தில் விபரிக்கப்பட்டுள்ள பெரும் போர் காணப்படுகின்றது. இது இரண்டு அரச குலங்களான பாண்டவர்கள் மற்றும் கௌரவர்களுக்கு இடையேயான ஆழமான பகையின் உச்சக்கட்டமாகும். கௌரவர்கள் பாண்டவர்களின் சொத்துக்களை சட்டவிரோதமாக அபகரித்தனர். போரைத் தவிர்த்து சமாதானமான முறையில் பிணக்கினைத் தீர்ப்பதற்காக கிருஷ்ணர் மற்றும் ஏனைய முக்கியஸ்தர்களினால் (வீஷ்மர்,துரோணர்,விதுரர்) மேற்கொள்ளப்பட்ட அனைத்துவிதமான பேச்சுவார்த்தைகளும் தோல்வியில் முடிந்ததால், இறுதி தெரிவாக போர் ஆரம்பமாகியது என்பதோடு அது தவிர்க்க முடியாததாகவும் மாறியது. பாண்டவர்களுக்கு இரண்டு தெரிவுகள் இருந்தன. ஒன்று தங்கள் உரிமையைப் பெற்றெடுக்கும் கடமைக்காகப் போரிடுவது, அல்லது போரைத் தவிர்த்துவிட்டு அமைதிக்காக தோல்வியை ஏற்றுக்கொள்வது போன்றவை ஆகும். போர் தொடங்குவதற்கு சற்று முன்பு, பாண்டவ சகோதரர்களில் ஒருவரான இளவரசர் அர்ஜுனன், கிருஷ்ணரிடம் தனது எதிரியை நன்றாகப் பார்ப்பதற்காக தனது இரதத்தை இரு தரப்புக்கும் இடையில் சென்று நிறுத்தும்படி கேட்டார். எதிரி அணிகளில் அர்ஜுனன் தனது சகோதரர்கள், உறவினர்கள் மற்றும் அவரது ஆசிரியர்களைப்

பார்த்தார். அந்த முக்கியமான தருணத்தில், அர்ஜுனனின் குடும்பம், உறவினர்கள் மற்றும் ஆசிரியர்களின் மீதான பற்றுதல் ஆதிக்கம் செலுத்தியது. இதனால் போரின் நீதி (தர்மம்) பற்றிய சந்தேகம் அவர் மனதில் நுழைந்தது. அவரது குழப்பத்தில், அவர் இனி எந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரியாமல் இருந்தார். எனவே அவர் வழிகாட்டுதலுக்காக கிருஷ்ணரிடம் திரும்பினார். கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு ஒருவர் தனது சொந்த ஆளுமையின் வரம்புகளுக்கு மேல் எப்படி உயர வேண்டும் என்பதைக் காட்டினார். கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு ஆன்மீகஞானத்தையும் கடவுளுடன் ஐக்கியம் அடையும் வழிமுறைகளையும் கற்றுக் கொடுத்தார். பகவத் கீதையின் எழுநூறு வசனங்களும் குருக்ஷேத்திரப் (Kurukshetra) போர்க்களத்தில் கிருஷ்ணருக்கும் அர்ஜுனனுக்கும் இடையே நடந்த உரையாடலாகக் காணப்படுகின்றது. தர்ம யுத்தத்தில் போர்வீரன் ஒரு சாத்தியமான வெகுமதியைப் பற்றி சிந்திக்காமல் தன் கடமையை செய்ய தார்மீக ரீதியில் கடமைப்பட்டிருக்கிறான். இந்த ஒற்றை உபதேசம் இராணுவ நெறிமுறைகளின் முழு அடித்தளத்தையும் நித்தியத்திற்கும் உள்ளடக்கியது (Sinha,2005). மேலும், அதன் உலகளாவிய பொருத்தம் இன்றுவரை உலகளாவிய வகையில் மாறாமல் உள்ளதைக் காணலாம். தர்ம யுத்தத்தின் தத்துவம் இந்திய வரலாற்றில் பல பெரிய மனிதர்களை ஊக்கப்படுத்தியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே, இந்து இதிகாசங்கள் தர்ம யுத்தத்தின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளதோடு சூரிய அஸ்தமனத்தில் யுத்தத்தை நிறுத்தி, அந்தந்த முகாம்களுக்குத் திரும்பும் பழக்கம், அன்றைய உயிரிழப்புகளை எளிதில் எதிர்கொள்ளும் பழக்கத்தையும் வலியுறுத்தியுள்ளதோடு மிகவும் பழங்காலத்திலிருந்தே இந்தமுறைகள் நடைமுறையிலிருந்து வருகின்றதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. மேலும், ஆரம்ப நாட்களில் ஒரு போரை அறிவிப்போடு நடத்துவதே நடைமுறையாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும் (Sinha, 2005; Mani, 2001).

எனவேதான், மனிதாபிமானச் சட்டத்தின் அடிப்படையில், சர்வதேச உறவுகளில் பலத்தைப் பயன்படுத்துவது மற்றும் பலப்பிரயோகத்தை தவிர்த்தல் தொடர்பான கோட்பாட்டின் ஆரம்ப அவதாரத்தை இந்து மரபு பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. இது இப்போது ஐக்கிய நாடுகளின் சாசனத்தின் உறுப்புரை 2, பத்தி 4 இல் பொறிக்கப்பட்டுள்ளது என்பதோடு சமகால சர்வதேச உறவுகள் கோட்பாட்டின் அடிப்படையாகவும் அமைந்துள்ளதைக் காணலாம்.

### 5.2. சர்வதேச மனிதாபிமானச் சட்டத்துக்கான இந்துசமயத்தின் பங்களிப்பு

சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தினுடைய வளர்ச்சியில் இந்துசமயத்தினுடைய கொள்கைகள் மற்றும் கோட்பாடுகள் ஆழமான தாக்கத்தைச் செலுத்தியுள்ளன. இந்து சமயத்தின் சில அடிப்படைக் கொள்கைகளான இரக்கம், அஹிம்சை மற்றும் அனைத்து உயிரினங்களுக்கும் மரியாதை வழங்குதல் போன்றவை சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் வளர்ச்சியில் பங்களிப்புச் செய்துள்ளன. மேலும், அஹிம்சை தொடர்பான கருத்து மற்றும் இந்து சமயத்தினுடைய சட்ட அமைப்பில் அதனுடைய தாக்கம் ஆகியவை சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அஹிம்சை தவிர, கர்மா மற்றும் தர்மம் போன்றவையும் யுத்தம் தொடர்பான பல்வேறுபட்ட விதிகளை வழங்கியுள்ளதைக் காணலாம். இவை சமகால சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் அடிப்படை விதிகள் மற்றும் கோட்பாடுகளின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்களவு தாக்கம் செலுத்தியுள்ளன எனலாம்.

அந்தவகையில் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் அடிப்படையாகக் கருதப்படுகின்ற போர்முறைகள் இந்துசமய மரபிலிருந்து தருவிக்கப்பட்டவையாகக் காணப்படுகின்றன. மேலே குறிப்பிட்டது போல யுத்தமானது ஒரு நீதியான காரணத்திற்காக நேர்மையாக நடத்தப்பட வேண்டும் என்று இந்துசமயம் விதந்துரைக்கின்றது. போர் இரண்டு போர்வீரர்களுக்கு இடையில் இருக்க வேண்டும் எனவும். வீரர்கள் சமமானவர்களுடன் மட்டுமே போராட வேண்டும். அதாவது ஒரு அரசன் இன்னுமொரு அரசனுடன் மட்டுமே போரிட வேண்டும். ஒரு குதிரைப்படை வீரர் இன்னுமொரு குதிரைப்படை வீரருடன் மட்டுமே போரிட வேண்டும், தேரில் செல்லும் வீரருடன் அல்ல என மிகவும் உன்னதமான யுத்த விதிமுறைகளையும் முறையையும் இந்துசமயம் வழங்கியுள்ளதைக் காணலாம் (Mani,2001).

மேலும், யுத்தத்தை ஒழுங்குபடுத்தும் வழிமுறைகளிலும் மனிதநேயச் சிந்தனையிலும் நவீன மனிதாபிமானச் சட்டம் மிகவும் கரிசனை கொண்டுள்ளதைக் காணலாம். இது இந்துசமயத்தில் வலியுறுத்தப்படுகின்ற அஹிம்சை தொடர்பான கோட்பாட்டில் வலியுறுத்தப்படுகின்றது. சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் மிக முக்கியமான அம்சங்களில் ஒன்று போரில் பயன்படுத்தப்படும் ஆயுதங்களின் கட்டுப்பாடு ஆகும். தேவையற்ற துன்பங்களை ஏற்படுத்தக்கூடிய அல்லது கண்மூடித்தனமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஆயுதங்களைப் பயன்படுத்துவதை இது தடை செய்கின்றது. இதில் இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்கள் போன்ற ஆயுதங்களும் அடங்கும். இத்தகைய ஆயுதங்கள் குறிப்பாக கொடூரமானவை மற்றும் மனிதாபிமானமற்றவை என்று கருதப்படுகின்றன (Crawford & Pert,2020).

மனிதாபிமானச் சட்டத்தின் ஆயுதங்களின் கட்டுப்பாடு இந்து மதத்தில் உள்ள அஹிம்சையின் கருத்தாக்கத்தால் செல்வாக்குக்கு உட்படுகின்றது. இது போரில் அழிவுகரமான ஆயுதங்களைத் தவிர்ப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.

விஷம் அல்லது முள் அம்புகள் போன்ற தேவையற்ற ஆயுதங்களை யுத்தகளத்தில் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுக் காணப்பட்டன. ஆயுதங்களைப் பயன்படுத்துவதன் முக்கிய நோக்கம் எதிரிகளை பலவீனப்படுத்துவது மற்றும் எதிரிப் படைகளை போர்க்களத்தில் முன்னேறவிடாமல் தடுத்து நிறுத்துவதும் ஆகும். எதிரிகளைக் படுகொலை செய்வதற்கு அல்ல என்ற இந்த கருத்து அக்காலத்தில் போர்மரபுகள் மிகவும் உன்னதமான நிலையில் காணப்பட்டமையை எடுத்துக்காட்டுகின்றது (Mani,2001). இதற்கு சிறந்த உதாரணம் இராமாயணத்தில் காணப்படுகின்றது. இராம-இராவண யுத்தத்தில் இராமனினுடைய சகோதரன் லட்சுமணன் அழிவுகரமான ஆயுதங்களை பயன்படுத்துவதை இராமர் தடைசெய்தார். இராவணன் அநீதியின் அடையாளமாக இருந்து நீதிக்குப் புறம்பான யுத்தத்தை மேற்கொண்டாலும், அழிவுகரமான ஆயுதங்களைப் பயன்படுத்துவது முழு எதிரி இனத்தையும் அளிக்கும் எனவும், எனவே அவை தடைசெய்யப்படவேண்டும் எனவும் இராமர் எடுத்துரைத்தார் (Mani,2001). அதேபோல் மகாபாரதத்திலும் அர்ஜுனன், போர்ச் சட்டங்களைக் கடைப்பிடித்து, மரபுவழிப் போரில் தீவிர அழிவுகரமான ஆயுதங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்த்தான், ஏனென்றால் சண்டை சாதாரண மரபு ஆயுதங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டபோது, அசாதாரணமான அல்லது வழக்கத்திற்கு மாறான வகைகளைப் பயன்படுத்துவது ஒழுக்கக்கேடானது என ஏற்றுக்கொள்ளப்பட்டது(Sinha, 2005;Mani,2001).

எனவேதான், ஆயுதங்களின் பாவனை தொடர்பான இந்த நியதிகள் அந்தக்காலத்தில் வளர்ச்சியடைந்த போர்மரபுகளை எடுத்துக்காட்டுவதோடு அவை பிற்காலத்தில் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் ஆயுதங்களின் பிரயோகம் தொடர்பான ஒழுங்குபடுத்தல்களுக்கும் அடிப்படையாக அமைந்தது எனலாம். இந்துசமயமானது அழிவுகரமான ஆயுதங்களைப் பயன்படுத்துவதை முடிந்தவரை தவிர்க்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்றது. ஏனென்றால், இந்த ஆயுதங்கள் எதிரிகளுக்கு மட்டுமல்ல, அப்பாவி பொதுமக்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் பெரும் துன்பத்தையும் அழிவையும் ஏற்படுத்துகின்றன (Davis, 2015). ஆகவே, இந்து சமயத்தைப் பொறுத்தவரை, போரில் அழிவுகரமான ஆயுதங்களைப் பயன்படுத்துவது கடைசி முயற்சியாக மாத்திரமே இருக்க வேண்டும். இந்தக் சிந்தனைகள் நவீன மனிதாபிமானச் சட்டத்தின்

மனிதநேயச் சிந்தனை, இராணுவத்தேவை மற்றும் சரிசமவீதக் கோட்பாடுகளை பிரதிபலிப்பவையாகக் காணப்படுகின்றன.

மேலும், சம கால யுத்த நியதிகளையும் மரபுகளையும் விட மிகவும் வளர்ச்சியடைத்த மரபாகக் காணப்படுவது யாதெனில் யுத்தம் நடைபெறுவதற்கான இடம் மற்றும் நேரம் தீர்மானிக்கப்பட்டு அவற்றினை நடத்துவதாகும். உதாரணமாக, மகாபாரதத்தின் பிரகாரம் யுத்தமானது பகலில் மட்டுமே நடைபெறுவதற்கு இரு தரப்பினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதாவது சூரிய உதயத்தோடு ஆரம்பித்து சூரிய அஸ்தமனத்தோடு யுத்தம் நிறுத்தப்படுவது வழக்கமாகக் காணப்பட்டது.

சமகால சர்வதேச மனிதாபிமானச் சட்டமானது போர்க் கைதிகள் தொடர்பாகவும், யுத்தத்தில் காயமடைந்த மற்றும் இனிமேல் பங்கேற்க முடியாதவரின் பாதுகாப்பு மற்றும் அவர்களை நடத்தும் விதம் தொடர்பில் பல்வேறு விதிகளைக் கூறியுள்ளது (Dieter Fleck & Bothe,2013). பண்டைய இந்து யுத்த மரபுகளில் யார் தாக்கப்படலாம், யார் தாக்கப்படக் கூடாது போன்ற விதிகள் தெளிவாக வலியுறுத்தப்பட்டுள்ளதைக் காணலாம். அந்தவகையில் தேரோட்டிகள், யானை ஓட்டுபவர்கள், போர் இசைக்கலைஞர்கள் அல்லது பூசாரிகள் போன்ற எதிரி அல்லாத போராளிகளுடன் சண்டையிடக்கூடாது எனவும் பீதியடைந்த எதிரி அல்லது ஓடிக்கொண்டிருக்கும் எதிரியை பின்தொடரக்கூடாது எனவும், வாயில் காவலர்கள் கொல்லப்படக்கூடாது எனவும், வில்லில் நாண் அறுந்த அல்லது தேரை இழந்த ஒருவரை தாக்கக்கூடாது எனவும் கூறப்பட்டுள்ளது. நிராயுதபாணியாக நிற்கும் ஒருவர் மீது யுத்தம் செய்யக்கூடாது. உதாரணமாக இராமாயணத்தில் இராவணன் போர்க்களத்தில் ஆயுதமிழந்து நின்றவேளையில் இராமபிரான் அவர் மீது போர் தொடுக்காது இன்று போய் நாளைவா (Narayanan, R.K, n.d.,p.239) எனக் கூறியருளினார். இது இந்து சமயத்தில் நிலவிய உன்னதமான போர்தர்மத்தை எடுத்துக்காட்டுகின்றது. மேலும், ஒரு பலவீனமான அல்லது காயம்பட்ட மனிதன், அல்லது மகன் இல்லாத ஒருவன் கொல்லப்படக்கூடாது எனவும், சரணடைந்தவர் அல்லது தோற்கடிக்கப்பட்டவர் கொல்லப்படக்கூடாது எனவும் கூறுகின்ற அதேநேரம் போர்க் கைதியாகப் பிடிக்கப்பட்டவர் கண்ணியத்துடன் நடத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்துகின்றது(Mani, 2001).

காயமடைந்த கைதி வீட்டிற்கு அனுப்பப்பட வேண்டும் அல்லது அவரது காயங்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட வேண்டும் எனவும் இந்து மரபுகள் எடுத்துக்கூறுகின்றன. மேலும், அக்கினி புராணமானது போர்க் கைதிகளை

அடிமைப்படுத்தக்கூடாது எனத் தெளிவாகக் குறிப்பிடுகின்றது. வீரர்கள் சிறைபிடிக்கப்பட்டால், அவர்கள் போர் நிறுத்தத்தில்/முடிவில் விடுவிக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்துகின்றது. வெற்றி பெற்ற வீரர்கள் குடிமக்களை மனிதாபிமான முறையில் நடத்த வேண்டும் என்று கௌடில்யர் வாதிட்டார். குறிப்பாக, தோற்கடிக்கப்பட்ட மக்களைப் பற்றிய மனிதாபிமானக் கொள்கை நடைமுறைக்குரியது என்று அவர் கூறினார். ஒரு மன்னன் தான் தோற்கடித்தவர்களைக் கொன்று குவித்தால், தன்னைச் சுற்றியுள்ள அனைத்து ராஜ்யங்களையும் அவர் பயமுறுத்துகிறார் என்பதைக் காட்டும் எனவும், தோற்கடிக்கப்பட்டவர்களை பெருந்தன்மையுடன் நடத்தினால் வெற்றி பெறலாம் எனவும் கௌடில்யர் குறிப்பிடுகின்றார்(Sinha, 2005). அஹிம்சையின் அடிப்படையில் பரிவு, பாசம் மற்றும் இரக்கத்தை அடிப்படையாகக் கொண்டு அமைத்த இந்தக் கருத்தானது பிற்கால மனிதநேயக் கோட்பாட்டுக்கு அடிப்படையாக அமைந்தது எனலாம்.

சமகால சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தில் முக்கிய அம்சமாகக் காணப்படுகின்ற பொதுமக்கள் மற்றும் அவர்களுடைய இலக்குகளின் பாதுகாப்பு தொடர்பான விடயங்களின் இந்துசமயம் குறிப்பிடும் போர்மரபுகள் ஆழமாக ஊடுருவியுள்ளதைக் காணலாம். பழங்கால நூல்கள் போரின் பாதகமான தாக்கத்திலிருந்து பொதுமக்கள் மற்றும் பொதுமக்களினுடைய சொத்துக்கள் போன்றவற்றின் பாதுகாப்புத் தொடர்பில் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றன. சாலையில் நடந்து செல்லும் அமைதியான குடிமகன், உணவு உண்பவர், மறைந்திருப்பவர் மற்றும் போர் நடைபெறும் இடத்திற்கு அருகில் காணப்படும் அனைத்து பொதுமக்களும் பாதிக்கப்படக்கூடாது என இந்துசமய மரபுகள் வலியுறுத்துகின்றன (Mani, 2001). மனுவின் சட்டத்தின் பிரகாரம் துறவிகள், பிரார்த்தனையில் இருப்பவர்கள், உட்கார்ந்து இருப்பவர், நான் உன்னுடைய ஆதரவாளன் என்று சொல்பவர், உறங்கிக் கொண்டிருப்பவர், அங்கியை இழந்தவன், நிர்வாணமாக இருப்பவன், நிராயுதபாணியாக்கப்பட்டான், போரில் கலந்து கொள்ளாமல் பார்த்துக் கொள்பவன், மற்றொரு பகைவனோடு போரிடும் ஒருவன் போன்றவர்கள் தாக்கப்படக்கூடாது. மேலும், போரில் ஈடுபடாமல் சாலையில் நடந்து செல்பவர்கள், மோதலில் பங்கேற்காதவர்கள், அல்லது வெறும் பயணிகள், அல்லது உண்ணுதல் மற்றும் குடிப்பவர்கள் அல்லது சிறப்புத் தொழில்கள், செயல்பாடுகள் அல்லது இராஜதந்திர வேலைகளில் ஈடுபடுபவர்கள் மற்றும் பிராமணர்கள் போன்றவர்கள் போரில் நேரடியாக ஈடுபடவில்லை என்றால் அவர்கள் கொல்லப்படக்கூடாது என மனுதர்ம சாத்திரம் கூறுகின்றது (Sinha,2005). உதாரணமாக இராமாயணத்தில் இராஜ தூதுவரின் மீறமுடியாத உரிமை, பாதுகாப்பு

மற்றும் கண்ணியம் தொடர்பான ஒரு உரையாடல் இராவணனுக்கும் அவனது சகோதரன் விபீக்ஷணனுக்கும் இடையே காணப்படுகின்றது. இராவணன் தன் அரசவையில் இராமர் சார்பாக ஆஜரான தூதுவர் அனுமனை கொல்ல திட்டமிட்டான். தூதுவரைக் கொன்றால், அவர் ராஜ்ய தர்மத்திற்கு (அரசர்களின் கடமை) எதிராகச் செயல்படுவார் என்பதை அவரது சகோதரர் விபீக்ஷணன் நினைவுபடுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்(Sinha, 2005). மறுபுறம், இத்தகைய கூற்றானது எதை எடுத்துக்காட்டுகின்றது என்றால் இந்துசமயமானது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தூதுவர் பதவி தவிர்க்க முடியாதது என்பதை அங்கீகரித்தமையை ஆகும். இது சர்வதேச சட்டத்துக்கு தொன்மைச் சமயமான இந்துசமயம் ஆற்றிய பெரும் பங்களிப்பாகும் எனலாம்.

மறுபுறம் இந்துசமயத்தின் முக்கியமான ஆதாரமாகக் கருதப்படும் இருக்கு வேதமானது போரின் சரியான நடத்தையை வகுத்துள்ளதைக் காணலாம். ஒருவரைப் பின்னால் இருந்து தாக்குவது அநியாயம் என்றும், அம்பு முனையில் நஞ்சூட்டுவது கோழைத்தனமானது என்றும், நோயாளிகள் அல்லது முதியவர்கள், குழந்தைகள் மற்றும் பெண்களைத் தாக்குவது கொடூரமானது என்றும் வேத விதிகள் கூறுகின்றன (Sinha, 2005).

அதேநேரம் பொதுமக்கள் இலக்குகளின் பாதுகாப்புத் தொடர்பான விடயங்களும் பண்டைய இந்துசமய நூல்களில் இடம்பெற்றுள்ளதைக் காணலாம். பழம் தரும் மரங்கள், பூந்தோட்டங்கள், கோயில்கள் மற்றும் பிற பொது வழிபாட்டுத் தலங்கள் தொல்லையின்றி விடப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்படுகின்றன. ஒரு போரை நடத்தும்போது பொதுமக்களின் பாதுகாப்பு என்பது பெரும்பாலான நூல்களில் உள்ள முக்கிய அம்சமாகும். கௌடில்யர் கூட, பொதுமக்களையும் அவர்களின் வாழ்க்கை முறையையும் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறார். எனவே அவரது புத்திசாலித்தனமான ஆலோசனையானது, இலட்சியவாதத்தை விட, நடைமுறைவாதம் அல்லது பயன்பாட்டுவாதத்தின் அடிப்படையில் அமைந்து காணப்படுகின்றது (Mani, 2001).

மேலும்,பழங்காலத்தில் யுத்த முறைகளில் போருக்கான இடங்களைத் தெரிவுசெய்யும்போது அவை சுயராஜ்ய கிராம சமூகங்களின் தலைவர்களுடன் முறையான ஒப்பந்தங்களைச் செய்து, அறுவடைக்கு எந்த வகையிலும் தீங்கு விளைவிக்காமல் உறுதிசெய்து கொள்வது வழக்கமாகக் காணப்பட்டது. தற்செயலாக நிலத்தில் ஏற்படும் சேதங்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும்(Sinha,2005). போர்கள்

பொதுவாக மக்கள் வசிக்கும் பகுதிகளிலிருந்து விலகி சமவெளிகளில் நடத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தகைய சிந்தனைகள் ஒரு போரின்போது யார் தாக்கப்படலாம், யார் தாக்கப்படக்கூடாது, எவை தாக்கப்படலாம் எவை தாக்கப்படக்கூடாது என்ற மனிதாபிமானச் சட்டத்தின் அடிப்படையையும், போரின் போது போராளிகள் மற்றும் போராளிகள் அல்லாதவர்களையும், பொதுமக்கள் இலக்குகளையும், இராணுவ இலக்குகளையும் வேறுபடுத்த வேண்டும் என்பதற்கான முக்கிய அடிப்படைகளை நவீன சர்வதேச மனிதாபிமானச் சட்டத்துக்கு வழங்கியது எனலாம். இதே கொள்கையானது மேலதிக பின்னெடு I இல் உறுப்புரை 48 இல் காணப்படுகின்ற அதே நேரத்தில் அதன் உறுப்புரை 51 இராணுவ நடவடிக்கைகளில் இருந்து பொதுமக்களைப் பாதுகாக்கிறது.

புராதன இந்துசமய மரபுகளில் முன்னெச்சரிக்கையும் ஒரு நாட்டு மன்னரால் இன்னுமொரு நாட்டுக்கு விடுக்கப்படுகின்றது. அந்தவகையில் கால்நடைகள் கைப்பற்றப்படுவது ஒரு தாக்குதலின் முன்கூட்டியே எச்சரிக்கையாகும், மேலும் பொதுமக்கள் மற்றும் போராளிகள் அல்லாதவர்கள் தங்குமிடம் தேடுவதற்கு அவகாசம் அளித்தது (Mani,2001). மேலும், கர்மா தொடர்பான இந்து கருத்து, அல்லது காரண விளைவுச் சட்டம் (the law of cause and effect), சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் வளர்ச்சியிலும் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. இந்த கருத்து ஒருவரின் செயல்களுக்கு பொறுப்பேற்பதன் முக்கியத்துவத்தையும் அதனால் ஏற்படும் விளைவுகளையும் வலியுறுத்துகிறது. இந்த கோட்பாடு சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தில் பொறுப்புக்கூறல் கோட்பாட்டின் (principle of accountability) வளர்ச்சியில் பிரதிபலிக்கின்றது. இது சட்டத்தை மீறும் தனிநபர்களை அந்தச் செயற்பாட்டுக்குப் பொறுப்பாக்குகின்றது.

இவ்வாறு புராதன இந்து சமய ஆதாரங்கள் இன்றைய சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தை வடிவமைப்பதில் மிகப்பெரிய பங்களிப்பை வழங்கினாலும், அதே ஆதாரங்கள் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட யுத்தவிதிகள் அப்பட்டமாக மீறப்பட்டதையும் கோடிட்டுக் காட்டுகின்றன. குறிப்பாக குருசேத்திரப் போர்க்களத்தில் தர்ம யுத்தத்தில் ஈடுபட்ட பாண்டவர்கள் சில சமயங்களில் சூழ்ச்சியின் மூலம் யுத்தத்தில் முன்னேற்றமடைந்தனர். பாண்டவர்களில் மூத்தவரான யுதிஷ்ஷணன் கிருஷ்ணரின் சூழ்ச்சியால் அதர்ம வழியில் குரு துரோணாச்சாரியாரை வதைப்பதற்காக பொய் உரைத்ததையும், அது "தர்ம யுத்தத்தில்"

நியாயப்படுத்தப்பட்ட ஒன்றாக காணப்பட்டதையும் குறிப்பிடலாம். அதேபோல் யுத்தமுடிவில் அஸ்வத்தாமா இரவில் உறங்கிக்கொண்டிருந்த பாண்டவ புதல்வர்களை கொலை செய்வதையும் எடுத்துக்காட்டுகின்றன. அதேபோல் இராமாயணமானது ராமர் சூழ்ச்சியின் மூலம் மறைந்திருந்து வாலியைக் கொல்வதை எடுத்துக்காட்டுகிறது. எனவே, இந்தகைய யுத்தச் சூழ்ச்சிகளும், யுத்த தரப்புக்களால் ஏற்படுத்தப்பட்ட யுத்தவிதிகளும் மீறல்களுக்கு உற்படுவதும் அதனை தர்மத்தின் பெயரால் நியாயப்படுத்துவதும் சகஜமாகக் காணப்பட்டது. எனினும் பெரும்பாலான போர்களில் ஏதோ ஒருவகையில் சம்மந்தப்பட்ட தரப்பினர் யுத்தவிதிகளை மதித்ததையும், பின்பற்றியதையும் எடுத்துக்காட்டுகின்றன.

இது தவிர இந்துசமய சிந்தனைகளின் இடம்பெற்ற யுத்த விதிகள் குறிப்பிட்ட சில யுத்தச் சூழ்நிலைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்ததால் அவற்றின் உலகளாவிய தன்மையும் கேள்விக்குட்படுத்தப்பட்டிருந்தன. எனினும், அன்பு, இரக்கம், கருணை போன்ற மனிதாபிமானச் சிந்தனை உற்பட போர்வீரர்களின் கடமை மற்றும் பொறுப்புக்கள் சகல சமூகங்களுக்கும் பொதுவான உலகளாவிய கோட்பாடாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், இந்து தத்துவங்கள் மற்றும் சிந்தனைகளின் யுத்த நியதிகள் மற்றும் சில அடிப்படைகள் முறையாக ஒழுங்குபடுத்தப்பட்ட வகையில் பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து சில தனிநபர்கள் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் போன்ற அமைப்புக்களால் சட்டமாக்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## 6. முடிவுரை

பொதுச் சர்வதேச சட்டத்தின் ஒரு கிளையாகக் காணப்படும் சர்வதேச மனிதாபிமானச் சட்டமானது ஆயுத மோதல்களின் நடத்தையை ஒழுங்குபடுத்தும் ஒரு சட்ட அமைப்பு என்பதோடு பொதுமக்கள் மற்றும் போர்க் கைதிகள் போன்ற போர்களில் பங்கேற்காத மற்றும் இனி பங்கேற்க முடியாத நபர்களைப் பாதுகாக்க முயல்கின்றது. இந்த நோக்கத்துக்காக சர்வதேச மனிதாபிமானச் சட்டமானது பல்வேறு அடிப்படை விதிகள் மற்றும் கோட்பாடுகள், ஒப்பந்தங்கள் மற்றும் வழக்காறுகளின் வாயிலாக ஒழுங்குபடுத்தியுள்ளதைக் காணலாம். எனினும், இன்றைய இந்த சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் வளர்ச்சியானது பல நீண்ட வரலாற்றுப் பரிணாமங்களை உடையதாகக் காணப்படுகின்றது. ஏனெனில் போர் என்பது மனித வரலாற்றில் தவிர்க்கமுடியாத ஒன்றாக இருந்துவந்துள்ளதோடு அது மிகுந்த துன்பங்களையும் சேதங்களையும் ஏற்படுத்துவதாகவும் காணப்பட்டது. எனவே, இந்தப் போரின் நடத்தைகளை ஒழுங்குபடுத்துவதற்கான விதிகளும், மரபுகளும் பல்வேறு

நாகரிகங்கள், மதமரபுகள் மற்றும் தத்துவங்களிலிருந்து உருவாக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டு மனித துயரங்களைக் குறைப்பதற்கு பங்களிப்புச் செய்துவந்துள்ளதைக் காணலாம்.

இந்தவகையில் யுத்த நியதிகளையும், விதிகளையும் உலகுக்கு வழங்கிய மதங்களுள் குறிப்படத்தக்களவு செல்வாக்குச் செலுத்துகின்ற மதமாக இந்துசமயம் காணப்படுகின்றது. சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தினுடைய வளர்ச்சியில் இந்துமதத்தினுடையை கொள்கைகள், கோட்பாடுகள் மற்றும் தத்துவங்கள் ஆழமான தாக்கத்தைச் செலுத்தியுள்ளன. இவை சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தில் பல்வேறுபட்ட விதிகள் மற்றும் கோட்பாடுகளை உள்ளடக்கியுள்ளது. ஒரு போரின்போது யார் தாக்கப்படலாம், யார் தாக்கப்படக்கூடாது, எவை தாக்கப்படலாம் எவை தாக்கப்படக்கூடாது என்ற மனிதாபிமானச் சட்டத்தின் அடிப்படையான போர் முறைகள், வழிமுறைகள் அல்லது போர் ஆயுதங்களும் அவற்றின் மட்டுப்பாடும், யுத்தக் கைதிகளை மரியாதையுடனும் கௌரவத்துடனும் நடத்தவேண்டிய கடப்பாடு, காயமடைந்த யுத்தக்கைதிகளுக்கான மருத்துவ சிகிச்சை அளிக்க வேண்டியதன் அவசியம் போன்றவையும் வலியுறுத்தப்படுகின்றன. மேலும், போரின் போது போராளிகள் மற்றும் போராளிகள் அல்லாதவர்களைளையும், பொதுமக்கள் இலக்குகளையும், இராணுவ இலக்குகளையும் வேறுபடுத்துதல் உள்ளிட்ட பொதுமக்களின் பாதுகாப்பு, போர் நடத்தை மற்றும் போர் விதிகள் தொடர்பான தெளிவான வழிகாட்டுதல்கள், கொள்கைகள் மற்றும் கோட்பாடுகளை உள்ளடக்கியுள்ளதாகக் காணப்படுகின்றன. செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் ஹேக் சமவாயங்கள் உட்பட பல்வேறு தனிநபர்கள் மற்றும் அமைப்புகளின் முயற்சியால் இந்தக் கோட்பாடுகள் பின்னர் முறையான வகையில் சர்வதேச சட்டமாக உருவாக்கப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். சமகாலத்தில் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் மிக முக்கிய ஆதாரமாகக் காணப்படும் ஜெனிவா சமவாயங்கள் போர்க் காலங்களில் காயமடைந்த மற்றும் நோய்வாய்ப்பட்ட வீரர்கள், யுத்தக் கைதிகள் மற்றும் பொதுமக்களை நடத்தும் விதம் தொடர்பான விதிகளை வழங்கியுள்ளன. இவை அனைத்துக்கும் அடிப்படை ஆதாரமாக இந்துமத ஆதாரங்கள், குறிப்பாக அஹிம்சை தொடர்பான கொள்கை காணப்படுகின்றது. அஹிம்சை தவிர, கர்மா மற்றும் தர்மம் போன்றவையும் யுத்தம் தொடர்பான பல்வேறுபட்ட விதிகளை வழங்கியுள்ளதைக் காணலாம். இவை சமகால சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் அடிப்படை விதிகள் மற்றும் கோட்பாடுகளின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்களவு தாக்கம் செலுத்தியுள்ளமையைக் காணலாம். மொத்தத்தில் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் அடிப்படை விதிகள் மற்றும் கோட்பாடுகளான மனிதநேய கோட்பாடு,

இராணுவத்தேவைக் கோட்பாடு, வேறுபாடுகாணுதல் கோட்பாடு, சரிசமவீதக் கோட்பாடு, முன்னெச்சரிக்கை கோட்பாடு போன்றவைகளை வடிவமைப்பதில் பாரியளவான பங்களிப்பை இந்துசமயம் வழங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எனினும், இந்துசமய மரபுகளில் விதந்துரைக்கப்பட்ட யுத்தத்தை ஒழுங்குபடுத்தும் சில விதிகள் சமகாலத்தில் காணப்படுகின்ற சர்வதேச மனிதாபிமானச் சட்ட விதிகளைவிட மிகவும் உயர்ந்தவகையில் காணப்படுவதைக் காணலாம். குறிப்பாக யுத்த வீரர்கள் யார் யாருடன் போரிட வேண்டும் என்ற நியதி, ஆயுதங்களின் மட்டுப்பாடு, தாக்குதல் மேற்கொள்ளப்படும் நேரம் மற்றும் இடம் தொடர்பான விதிகள் போன்ற விடயங்கள் சமகாலத்தில் காணப்படுகின்ற யுத்த விதிகளை விஞ்சும் அளவுக்கு காணப்படுவதை உணரக்கூடியதாக இருக்கின்றது. எனினும், இத்தகைய விதிகள் முறையான வகையில் ஒழுங்குபடுத்தப்படவில்லை என்பதையும் நினைவில் கொள்ளவேண்டியது அவசியமானதாகும். சமகால சர்வதேச சட்டமானது இத்தகைய விதிகளை ஒழுங்குபடுத்தி முழு உலகுக்கும் பொருந்தக்கூடிய வகையில் சட்டரீதியாக நடைமுறைச் சாத்தியமாக்கியது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இருந்தாலும், சமகால சர்வதேச சட்டத்தினுடைய வளர்ச்சியில் இந்துசமய மரபுகள் வழங்கிய பங்களிப்பு மிகவும் குறிப்பிடத்தக்கதாகக் காணப்படுவதோடு இது உலகில் அமைதியையும், சமாதானத்தையும் நிலைநிறுத்துவதற்கு இந்துசமயம் உலகிற்கு வழங்கிய பங்களிப்பு எனலாம்.

## References


Alexander, A. (2015). A Short History of International Humanitarian Law. *European Journal of International Law*, [online]26(1), pp.109–138. doi:https://doi.org/10.1093/ejil/chv002.

Balkaran, R. and Dorn, A.W. (2022). Charting Hinduism's rules of armed conflict: Indian sacred texts and international humanitarian law. *International Review of the Red Cross*, [online] 104(920-921), pp.1762–1797. doi:https://doi.org/10.1017/s181638312200056x.

Bartles-Smith, A. (2022). Religion and international humanitarian law. [online] *International Review of the Red Cross*. Available at: https://international-review.icrc.org/articles/religion-and-ihl-

920#:~:text=Religions%20laid%20many%20of%20the [Accessed 26 May 2023].

Bartles-Smith, A., Crosby, K., Harvey, P., Premasiri, P.D., Tilakaratne, A., Ratheiser, D., Deegalle, M., Trew, N.M., Travagnin, S. and Harris, E. (2021). Reducing Suffering During Conflict: The Interface Between Buddhism And International Humanitarian Law. *Contemporary Buddhism*, pp.1–67. doi:https://doi.org/10.1080/14639947.2021.1976016.

Bryant, E.F., Edwin Francis Bryant and Patañjali (2009). *The Yoga Sutras of Patanjali*. Henry Holt.

Cismas, I. and Heffes, E. (2020). Not the Usual Suspects: Religious Leaders as Influencers of International Humanitarian Law Compliance. *Yearbook of International Humanitarian Law*, 22, pp.125–150. doi:https://doi.org/10.1007/978-94-6265-399-3_6.

Coward, H.G., Lipner, J.J. and Young, K.K. (1989). *Hindu ethics: purity, abortion, and euthanasia*. Albany: State University of New York Press.

Crawford, E. and Pert, A. (2020). *International Humanitarian Law*. Cambridge: Cambridge University Press.

Davis, R.H. (2015). *The Bhagavad Gita a biography*. Princeton, New Jersey Oxford Princeton University Press.

Dieter Fleck and Bothe, M. (2013). *The handbook of international humanitarian law*. Oxford, United Kingdom: Oxford University Press.

Greenwood, C. (1995). Historical Development and Legal Basis. In: D. Fleck, ed., *The Handbook of Humanitarian Law in Armed Conflict*. Oxford, United Kingdom: Oxford University Press, pp.101–150.

ICRC (2004). *Advisory Service: What is International Humanitarian Law?* [online] Available at: https://www.icrc.org/en/doc/assets/files/other/what_is_ihl.pdf

[Accessed 6 May 2023].

International Committee of the Red Cross (2014). *What is international humanitarian law?* [online] *International Committee of the Red Cross*. Available at: https://www.icrc.org/en/document/what-international-humanitarian-law [Accessed 6 May 2023].

Kilby, C.A. (2022). The gift of fearlessness: a Buddhist framework for the protection of vulnerable populations under international humanitarian law. *Contemporary Buddhism*, pp.1–13. doi:https://doi.org/10.1080/14639947.2022.2038027.

Knott, K. (2016). *Hinduism: a very short introduction*. Oxford: Oxford University Press.

Kruk, B. (2021). *Looking in the mirror: How international humanitarian law reflects major world religions*. [online] www.cba.org. Available at: https://www.cba.org/Sections/International-Law/Articles/2021/Looking-in-the-mirror [Accessed 26 May 2023].

Mani, V.S. (2001). International humanitarian law: an Indo-Asian perspective. [online] *International Review of the Red Cross*. Available at: https://www.icrc.org/en/doc/resources/documents/article/other/57jqzm.htm [Accessed 6 May 2023].

Narayanan, R.K (n.d.). *The Ramayana: A Shortened Modern Propose Version of the Indian Epic (suggested by the Tamil Version of Kamban)*. [online] New Dhelhi: Penguin Books. Available at: http://dt.pepperdine.edu/courses/greatbooks_v/gbv-15/66697602-The-Ramayana-R-K-Narayan.pdf.

Paliwala, M. (2020). *Fundamental principles of International Humanitarian Law*. [online] iPleaders. Available at: https://blog.ipleaders.in/international-humanitarian-law/.

Ponnu, R. (n.d.). *Ahimsa: Its Theory and Practice in Gandhism*. [online] www.gandhiashramsevagram.org. Available at: https://www.gandhiashramsevagram.org/gandhi-articles/Ahimsa-Its-Theory-andPractice-in-Gandhism.php [Accessed 22 May 2023].

Singh, K. (2021). Ethical Code of War in Ancient India of the Creative Commons Attribution License (CC BY 4.0). *International Journal of Trend in Scientific Research and Development (IJTSRD)*, [online] 5(2), pp.308–310. Available at: https://www.ijtsrd.com/papers/ijtsrd38426.pdf [Accessed 21 May 2023].

Singh, U. (2017). *Political Violence in Ancient India*. Harvard University Press.

Sinha, M.K. (2005). Hinduism and international humanitarian law. *International Review of the Red Cross*, 87(858), pp.285–294. doi:https://doi.org/10.1017/s1816383100181342.

World Population Review (2022). *Religion by Country 2022*. [online] worldpopulationreview.com. Available at: https://worldpopulationreview.com/country-rankings/religion-by-country.

Zoli, C. (n.d.). *The 'god gap' in international humanitarian law lessons learned from Islamic jurisprudence*. [online] Available at: https://securitypolicylaw.syr.edu/wp-content/uploads/2014/06/God_Gap_Humanitarian_Law_FINAL.pdf [Accessed 26 May 2023].

புஸ்பராசா,ந. (2021). *மனித உரிமைகள்: கோட்பாடும் நடைமுறையும்.* குமரன் புத்தக இல்லம்